## உலகத் தோற்றத்திற்கு முற்பட்ட இரகசியமான தேவ ஞானம்
## SECRET WISDOM OF GOD BEFORE TIME BEGAN

### அறிமுகம்

உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனுடைய மனதில் இருந்தது என்ன என்பதை வசனங்களின் வழியாக வெளிப்படுத்துவதே இப்பாடத்தின் நோக்கம். வசனங்களின் சந்தர்ப்பப் பொருளைப் புரிந்துகொண்டு, அவற்றை வாசித்து கற்றுக்கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும்படி தேவையான விவரங்களை இந்தப் பாடம் சுருக்கமாக வழங்குகின்றது.

இந்த பாடப்பொருள் சம்பந்தமான விளக்கங்கள் இதே ஆசிரியர் எழுதியுள்ள மற்ற சில புத்தகங்களிலும் காணப்படுகின்றன. அந்தக் குறிப்புகளையும் இந்த புத்தகத்தில் பயன்படுத்தி இருக்கிறோம். எங்களது இணையதளத்தையும் நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். www.kingdomofchrist.info

*அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல.* ***உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும்,*** *மறைக்கப்பட்டதுமாயிருந்த* ***இரகசியமான தேவ ஞானத்தையே*** *பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில்* ***அன்பு கூருகிறவர்களுக்கு*** *ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். 1 கொரி. 2:6-10.*

**தேவனிடம் அன்பு கூரும்படி** தீர்மானித்திருக்கும் **எல்லா மனிதர்களும்** அவருடைய இரகசிய ஞானத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள்; இந்த இரகசிய ஞானத்தை பூலோகத்தையும், மனித குலத்தையும் படைத்ததின் மூலமாக உண்மையாக்கிவிட்டார். தேவனுடைய ராஜ்யத்துக்குட்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கைக்கென்று தங்களின் "விசுவாசக் கதவினை" விரிவாகத் திறக்க விரும்புகின்ற கிறிஸ்தவர்களுக்காக இப்பாடத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. *கொலோசெயர் 3:1-3.* நாம் ஏன் உண்டாக்கப்பட்டோம் என்றே அறியாமல் இருளில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்குப் பயன்படும்படியாகவும் இப்பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தங்களில் இருக்கும் நம்பிக்கையை தங்கள் நண்பர்களோடும், உறவினர்களோடும் பகிர்ந்துகொள்ள விரும்பும் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் இவைகள் பயனுள்ளவையாக அமையும். *1 பேதுரு 3:13-16.*

உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனுடைய மனதில் இருந்தது என்ன என்பதை வெளிப்படுத்தக் கூடிய மற்ற வசனங்களையும் நாம் இந்தப் பாடத்தில் படிப்போம். வேதாகமத்தை ஆழ்ந்து படிக்கவேண்டும் என்ற உங்களுடைய இலக்கை அடைந்து, விசுவாசத்தை கட்டி எழுப்புவதற்கு படிக் கற்களாக அமைந்துள்ள இப்பாடத்தொகுப்பில் முதல் படிக் கல்லாக இந்தப் பாடம் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையை நம்புவதற்கு மற்றவர்களைச் சார்ந்திருக்கும் கிறிஸ்தவர்களை, அந்தப் பெலவீனத்திலிருந்து விடுவிக்கும்படியாகவே இப்பாடத் தொகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. *2 தீமோத்தேயு 2:15; எபிரெயர் 5:12* இந்த வசனங்களில் அறிவிக்கப் பட்டுள்ளபடி நாம் செயல்பட்டால், மற்றவர்களை சார்ந்திராமல் நாமே சொந்தமாக முடிவெடுத்து வாழக்கூடிய சக்தி கிடைக்கும்.

தேவனுடைய வார்த்தையை கேட்டுப் புரிந்துகொள்ளுவோம்; அதை நம்பும்படி தீர்மானிப்போம்; பின்னர், அதன்படியாகவே விசுவாசத்தின் வாழ்க்கை வாழ்வோம், இதுவே நம்முடைய கொள்கை. *ரோமர் 4:20,21.* பூமியில் நாம் வாழும் போதே, தேவனுடைய ராஜ்யத்தில் நாம் இருப்பதுவும், நமக்குள் தேவனுடைய ராஜ்யம் இருப்பதுவுமே இதனால் நமக்குக்





கிடைக்கும் பலன் ஆகும். *லூக்கா 17:20,21; அப்போஸ்தலர் 26:18.*

**பாடம்**

தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் அவருக்கென்று பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதே அவருடைய திட்டம். இந்தத் திட்டத்திற்கென்று படைத்த மனுக்குலத்தைப் பற்றி விவரிப்பதே பரிசுத்த வேதாகமம். பரிசுத்த ஆவியால் ஏவப்பட்ட பல மனிதர்கள் எழுதிய பலதரப்பட்ட இலக்கிய வகைகளைச் சார்ந்த இலக்கியங்கள் இந்த தெய்வீகப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. "அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினான். *1 கொரி. 2:13; 2 தீமோத்தேயு 3:16,17; 2 பேதுரு 1:20,21. பார்க்கவும்.*

மனிதர்களால் எழுதப்பட்ட இந்தப் புத்தகத்தில் மனுக்குலத்தைப் பற்றிய தேவனுடைய விவரங்கள் அடங்கியிருக்கின்றன. தேவன் நமக்குத் தெரிவிக்கின்ற விவரங்களையெல்லாம் இந்த மனிதர்கள் சீராக எழுதி வைத்திருக்கின்றார்கள். பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் முதல் எஸ்தர் வரை உள்ள புத்தகங்களில் சீரான அமைப்பைப் பார்க்கமுடியும். புதிய ஏற்பாட்டில் நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும், அப்போஸ்தலர் புத்தகத்திலும் சரித்திர நிகழ்வுகள் இடம் பெற்றிருக்கின்றன. இவைகளையெல்லாம் நாம் வாசிக்கும் போது, நமக்குள் எழும்புகின்ற கேள்வி என்னவென்றால்: "ஆபிரகாம், யோசேப்பு, பேதுரு, பவுல், யோவான் போன்றவர்களையெல்லாம் பயன்படுத்தி தேவன் என்ன செய்துகொண்டு இருந்தார்? " என்பது தான். பரிசுத்த வேதாகமத்தின் நோக்கம் யோசேப்பு மற்றும் பவுலைப் பற்றியதல்ல. தேவன் இவர்களையெல்லாம் எதற்காகப் பயன்படுத்தினார் என்பதைத் தெரிவிப்பது தான். இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் வாழும் போது, அவரைக்கொண்டு தேவன் செய்தது என்ன? பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிட்ட ஒருவரைப்பற்றிய விவரத்தை நாம் புரிந்துகொண்ட பிற்பாடு, "என்னுடைய மகிமைக்கும், பவுலுடைய இந்த

அறிவிப்புக்கும் *1 கொரி. 2:6-10,* என்ன சம்பந்தம் இருக்கிறது?" என்று கேட்கத் தோன்றுகிறது. கொரிந்துவில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இந்தக் கடிதம் எழுதப்பட்டது; ஆகையால், இந்த வசனத்தின் சரியான சந்தர்ப்பப் பொருளில் இதனைப் படிக்கவேண்டியது அவசியம்.

கொரிந்துவில் இருந்த தேவனுடைய சபைக்கு பவுல் என்ன எழுதினான் என்பதை புரிந்துகொள்வது கடினமல்ல. அவர்கள் ஒரு காலத்தில் புறஜாதியாராயிருந்து கிறிஸ்தவர்களாக மாறினவர்கள், தங்கள் விசுவாசக் கதவினை திறக்க முடியாமல் போராடிக்கொண்டிருந்தார்கள். *அப். 14:27; 1 கொரி. 3:1-4.* "மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை" *1 கொரி. 1:26.* தேவன், தம்முடைய மனதில் இருந்ததைப் பற்றி பரிசுத்த ஆவியானவர் மூலமாக பவுலுக்கு அறிவித்ததன் அர்த்தத்தை நாம் புரிந்து கொண்ட பிற்பாடு, அது சத்தியமென்று ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்று முடிவு செய்ய வேண்டும். அதை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் நமது விருப்பமாயிருந்தாலும், அதை மாற்றுவதற்கு நமக்கு உரிமை இல்லை. *2 கொரி. 13:8.* உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனுடைய மனதில் இருந்த இரகசிய ஞானத்தை, இயேசு கிறிஸ்து மூலமாக கிறிஸ்தவர்களுக்கு அவர் செய்த நன்மை வெளிப்படுத்துகிறது. *1 கொரி. 1:30,31.* "கிறிஸ்துவுக்குள்ளானவர்களை" குறித்த தேவனுடைய ஞானம் உலகத் தோற்றத்துக்கு முன்னே நம்முடைய மகிமைக்கென்று தீர்மானிக்கப்பட்டதாய் இருந்தது. "முன்பாகத் தீர்மானித்தல்" என்ற ஆங்கில வார்த்தையானது **ப்ரூரிசோ (Prooriso)** என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதன் பொருள் முன்பே தீர்மானிப்பது என்பதாகும்.

வேத வசனங்களை நாமே கேட்டு, புரிந்துகொண்டு, நம்புவதன் மூலமாக நமது விசுவாசம் வளர்ச்சியடைகின்றது. *ரோமர் 10:17.* நமது விசுவாசம் நமது நடத்தையில் வெளிப்படுவதற்கு முன்பாகவே தேவனுடைய வார்த்தையோடு ஒன்று கலந்ததாய் நம்முடைய இருதயத்திலும், மனதிலும் இருக்க வேண்டும். *எபி. 4:2.* இந்த செயல் முறை நம்முடைய விசுவாசத்தை ஊக்குவிக்கின்றது. விசுவாசமுள்ளவர்களாய் இருப்பது என்பது நம்முடைய





சொந்த முடிவு, விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். *எபி. 11:6.* தேவனுடைய வார்த்தையை ஆழ்ந்து படிப்பதினால் உருவாகும் விசுவாசத்தைச் சார்ந்து, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை அமையும். இந்த ஆவிக்குரிய வாழ்க்கை இப்பாடத் தொகுப்பின் அறிமுக பாடத்தில் உள்ள "வாழ்க்கைப் பெட்டிக்கு" சமமானது.

மனித ஞானம் என்னும் வாழ்க்கை பெட்டிக்குள் அடைபட்டிருக் கின்ற கிறிஸ்தவர்கள் முறையான வேதபாடம், தனிப்பட்ட நம்பிக்கை, விசுவாசம் ஆகியவற்றின் மூலமாக அந்தப் பெட்டியிலிருந்து வெளி வந்து, தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை அதிகரித்துக்கொள்ள முடியும். *2 கொரி. 3:18.* இந்த இம்மைக்குரிய பெட்டியை முட்டித் தள்ளி நாம் வெளியே வந்தால் தான் விசுவாசத்தின் மூலமாக "தேவ ஞானம் என்ற ஆவிக்குரிய பெட்டிக்குள்" நாம் போகமுடியும். நமது விசுவாசம் என்பது "நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." *எபிரெயர் 11:1.* நமது விசுவாசத்தின் அளவைப் பொறுத்தே தேவனுடைய வசனத்திலிருந்து நம்மைக் குறித்து கற்றுக்கொண்ட காரியங்களில் நமது வைராக்கியமும் இருக்கும். நம்முடைய வைராக்கிய அளவை பொறுத்தே நம்முடைய நடத்தையில் ஒழுக்கமும் இருக்கும். *யோவான் 2:17.* சோதனை காலத்திலும் நாம் நீதியுள்ளவர்களாக நடந்தால் தான் நம்முடைய விசுவாசத்தை நிரூபிக்க முடியும். *யாக்கோபு 1:2-4; 2:21-23.* "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." *ரோமர் 1:17.*

*1 கொரி. 2:6-10*–இல் நாம் வாசிக்கும் பொழுது, கொரிந்து சபையில் பிரிவினை இருந்ததாய் குலோவேயாளின் வீட்டார் அப்போஸ்தல னாகிய பவுலுக்கு தெரிவித்தார்கள் என்று தெரிந்துகொள்கிறோம். *1 கொரி. 1:10-12.* இந்தத் தகவலை உறுதி செய்து கொண்ட பவுல், **தேவனுடைய ஞானத்தைக்** குறித்தும், **மனிதனுடைய ஞானத்தைக்** குறித்தும் அதிகமான விவரங்களை கொரிந்து சபைக்குக் கடிதமாக எழுதினான். 1 கொரிந்தியர் முதல் நான்கு அதிகாரங்களை வாசிக்கவும்.

தேவனுடைய ஞானத்தில் விசுவாசம் வைத்தால், "மனிதரைச் சார்ந்துகொள்ளும் வியாதியிலிருந்து" நாம் விடுதலை பெறமுடியும். உலகத் தோற்றத்துக்கு முன்பாக தேவனுடைய மனதில் இருந்ததை அறிந்து கொள்வதிலிருந்து நம்முடைய வேத பாடம் ஆரம்பிக்கவேண்டும். தேவனுடைய நோக்கத்தை மனதில் கொண்டு வேதத்தை வாசிப்பதற்கு இது உதவிகரமாக இருக்கும். சிலர் கிருபையினாலே மட்டுமே இரட்சிக்கப்பட்டு விடுவோம் என்ற எண்ணத்தோடு வேதத்தை வாசிக்கிறார்கள். தேவனுடைய **தீர்மானத்தைக் குறித்தும் கிருபையைக் குறித்தும்** பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினான். *2 தீமோ.1:9.* பரிசுத்த வேதாகமம் தேவனுடைய மனதை வெளிப்படுத்துவதாய் இருக்கின்றது. தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளை "கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை." தேவன் ஆயத்தம்பண்ணினவைகள் எவைகளோ, அவைகளே நம்முடைய மகிமையின் தேடலை நிறைவு செய்பவைகளாய் இருக்கின்றன என்பதை புரிந்துகொள்கிறோம். ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்களுக்குக் கடிதம் எழுதும் போது, மேலும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறான்.

*"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில்* **அன்புகூருகிறவர்களுக்குச்** *சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக் கிறோம்.* **தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன் னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்;** *எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார்." ரோமர் 8:28-30.*

யூதராகவோ, புறஜாதியாராகவோ இருந்து கிறிஸ்தவர்களாக மாறியவர்களுடன் தேவன் கொண்டுள்ள உறவை வெளிப்படுத்தி சகோதர சிநேகத்திலே ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருக்கும்படி உற்சாகப்படுத்துவ





தாய் இந்தப் பகுதி அமைந்து உள்ளது. *ரோமர் 11:13-21; 12:9-16.* தேவனுடைய குடும்பம், ரோமருக்கு எழுதின நிருபத்திலே கிறிஸ்துவின் சபையார் என்றும், கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்திலே தேவனுடைய சபையென்றும் குறிப்பிடப்படுகிறது. *ரோமர் 16:16; 1 கொரி. 1:2; 2 கொரி. 1:1* "ஆதாமுக்குள்" வாழ்கின்ற வளர்ச்சியடைந்த மனிதர் யாவரும் நன்மை செய்கிறவர்களாகவே வாழக்கூடிய சக்தியை இழந்துவிட்டார்கள் என்று பவுல் தெரிவிக்கிறான். *ரோமர் 3:10-18.* இந்த ஒரு விஷயத்தைத் தொடர்ந்து இயேசுவின் மரணத்தினை அடிப்படையாகக்கொண்ட கிருபையின் உபதேசங்களை ரோமர் முதல் எட்டு அதிகாரங்கள் வரையிலும் போதித்தான். மோசேயின் நியாயப்பிரமாணத்தி லிருந்து விடுதலையாகி, இந்த உபதேசங்கள் மீது விசுவாசம் வைப்பதினால், "கிறிஸ்துவுக்குள் ஆக்கினைத் தீர்ப்பில்லாத" ஒரு நிலைமையை கிறிஸ்தவர்கள் அனுபவிக்க முடிகிறது. *ரோமர் 8:1,2.* உலகத் தோற்றத்திற்கு முன்பு தேவனுடைய மனதில் இருந்தபடியே **அவருடைய குமாரரையும் குமாரத்திகளையும்,** பரிசுத்த ஆவியானவர் பரிசுத்தமாக்குகின்றார். *2 கொரி. 6:17,18; 2 தெச. 2:13-15.* பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டினை *ரோமர் 8:5-27* வரையுள்ள வசனங்கள் விவரிக்கின்றன. *ரோமர் 8:28-30* வசனங்கள் இந்த சந்தர்ப்பப் பொருளில் எழுதப்பட்டவையாகும்.

எல்லா மனிதர்களைக் குறித்தும் **தேவனுடைய முன் குறிக்கப்பட்ட தீர்மானத்தை** இந்த வசனத்தில் நாம் கற்றுக்கொள்ளமுடியும். "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி" அவர் உதவி செய்கின்றார். அவர் பரிசுத்தமாக்குகிறாரென்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள். அதற்கான செயல்முறைகள் எளிமையானவை. நாம் அவருடைய குமாரனுடைய சாயலாக மாறுகிறோம். இயேசுவினால் தேவனுடைய புதிய உடன்படிக்கையில் கொடுக்கப்பட்ட ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் இயேசு கிறிஸ்துவினுடைய போதனை யிலும், வாழ்க்கையிலும் வெளிப்படுத்தப்பட்டது. *யோவான் 1:3,4; 1 யோவான் 1:1-4; ரோமர் 8:1; எபிரெயர் 10:16.* புதிய உடன்படிக்கை

யை பற்றி தேவன் குறிப்பிட்ட போது, இந்தப் பிரமாணத்தைக் குறித்தே அவர் பேசினார். *எபி. 10:16,17.*

கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக்கப்படும் செயல் எளிமையானது. ஆயினும், நாம் மறுபடியும் பிறந்தநாள் முதற்கொண்டு, நம்முடைய உடலை விட்டு ஆவி பிரியும் வரையிலும், இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. *ரோமர் 6:22; வெளி. 2:10.* எல்லா கிறிஸ்தவர்களும் உலகத் தோற்றத்திற்கு முன்பு, அவர்களைப் பற்றி தேவன் தம் மனதில் கொண்டிருந்த தீர்மானத்தை அடையாளம் கண்டு கொண்டு, அதை குறித்து வாசித்து, புரிந்துகொண்டு, அதன் மீது விசுவாசம் வைக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். பவுலின் நிருபத்தை வாசிக்கும்படி ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. தேவனிடத்தில் அன்புகூருகிற அவருடைய நித்திய பிள்ளைகளுக்கு வேண்டிய எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்து மூலமாய் ஆயத்தம் பண்ணினார். ஆதி காலமுதல் “தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு” **நித்திய ஜீவன்** வாக்குத்தத்தம்பண்ணப்பட்டுள்ளது.

*“தேவனுடைய ஊழியக்காரனும், இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது: பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.* **பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம்பண்ணி,** *அதைக் குறித்த நம்பிக்கையைப்பற்றி தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி, ஏற்ற காலங்களிலே நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய கட்டளையின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார். தீத்து 1:1-4.*





இந்தச் சந்தர்ப்பப் பொருளை நிலை நிறுத்த, இதை எழுதிய அப்போஸ்தலன் இயேசு கிறிஸ்துவால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவன். *அப். 26:14-18.* தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தேவன் வாக்குத்தத்தம்பண்ணின நித்திய ஜீவனைக் குறித்து நம்பிக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்கள். நித்திய ஜீவனை பற்றிய சத்தியமும், தேவனுடைய பிள்ளைகளாக கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக்கப்படுகிற சத்தியமும் ஒன்றே. ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவன், அவன் ஞானஸ்நானம் பெற்ற நாள் முதற்கொண்டே நித்திய வாழ்க்கை வாழ ஆரம்பித்து விடுகிறான். *ரோமர் 6:8-10.* இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலமாக மனிதர்களுக்குக் கிருபை தந்தருளவேண்டுமென்ற எண்ணம், உலகத்தோற்றத்திற்கு முன்பு தேவனுக்கு இருந்தது. கிருபையின் அவசியத்தை பாடம் மூன்றிலே படிப்போம்.

**உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று** *அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.* **அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து,** *தமது மூலமாய் தேவன் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசி காலங்களில் வெளிப்பட்டார். உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார். 1 பேதுரு 1:18-21.*

இந்த நிருபங்களை பேதுரு எந்த நோக்கத்திற்காக எழுதினானோ, அதை மனதிற்கொண்டு மேற்கண்ட வசனங்களின் உள் அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். “நீங்கள் நினைவுகூரும்படி இந்த நிருபங்களினால் உங்கள் **உண்மையான மனதை** நினைப்பூட்டி எழுப்புகிறேன்” என்று கூறினான். *2 பேதுரு 3:2.* கள்ளப் போதகர்கள் மற்றும் நாத்திகர்களின் பலமான தாக்குதலை எதிர்கொள்ள சபையை

ஆயத்தம்பண்ணும்படி பேதுரு எழுதினான். *2 பேதுரு 2:1-4; 3:3,4.* இயேசு தமது சரீரத்தை சிலுவையின் மீது பலி செலுத்தினதினால், விசுவாசத்தினால் வரும் நீதியையும், புதிய பிறப்பினால் கிடைக்கின்ற நன்மைகளையும் கிறிஸ்தவர்கள் அனுபவித்துவருகிறார்கள். விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இந்தக் கிருபையின் மேல் விசுவாசம் வைப்பதால், பரிசுத்த ஆவியான வருடைய ஐக்கியத்தையும், வழிநடத்துதலையும் அனுபவிக்கும் சிறப்புரிமை பெற்றுள்ளனர். *அப். 5:32.* இயேசு தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த தால், கிறிஸ்தவர்களை சுத்திகரிக்கும் பணியினை பரிசுத்த ஆவியான வரால் செய்ய முடிகிறது. *யோவான் 7:37-38; 2 தெச. 2:13-15.* பரிசுத்த ஆவியானவருடைய சுத்திகரிப்பின் மீது விசுவாசம் கொண்டு தேவனிடத்தில் அன்பு கூரும்படி தீர்மானித்திருக்கிற எல்லா கிறிஸ்தவர்களுக்கும் கிருபை அளிக்கப்பட்டுள்ளது. நாம் இயேசு கிறிஸ்துவைப் போல மாறுவற்கு அவர் உதவி செய்கிறார். *ரோமர் 8:13,14; 1 பேதுரு 1:2.* இது மற்றுமொரு பாடத்தின் தலைப்பாகும். "முன்னோர்களால் பாரம்பரியமாய் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று" கிறிஸ்தவர்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். இதுவே "வாழ்க்கைப் பெட்டியாகும்." அநேக மக்கள் இதில் அகப்பட்டு வெளிவர முடியாமல் தவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

''கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும்" விசுவாசமுள்ள சபை அங்கத்தினர்கள் இன்றும் அனுபவித்து மகிழ்கிறார்கள். இதுவும் கூட "உலகத் தோற்றத்திற்கு முன்பாக" தேவனுடைய மனதில் இருந்தது தான்.

*நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.* **தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே,** *பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின*





*தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார். எபேசியர் 1:3-6.*

எபேசுவில் இருந்த பரிசுத்தவான்களுக்கு எழுதப்பட்ட நிருபத்தின் அறிமுகப்பகுதியாக இந்த வசனங்கள் இருக்கின்றன. **உலகத் தோற்றத்திற்கு முன்னே** சபையைப் பற்றியும், அதன் ஒவ்வொரு அங்கத்தினரைப் பற்றியும் தேவன் தீர்மானித்திருந்தது என்ன என்பதை இந்த அறிமுகப்பகுதியின் மூலம் நாம் புரிந்துகொள்ளமுடியும். பவுல் எபேசுவுக்கு பிரயாணஞ்செய்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தான். *அப். 19:8.*

"தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு" உட்படும்படி தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டிருந்த மக்கள் இந்த எபேசு சபையில் இருந்தார்கள். *கொலோ. 1:13.* இந்த உலகில் வாழும் மக்களுக்கு மறுபடியும் பிறக்கக்கூடிய வாய்ப்பினை கொடுக்குபடி, தேவன் முன்னமே தீர்மானித்திருந்தார். நம்முடைய மகிமைக்கென்று அவர் முன்குறித்திருந்த திட்டத்தின் மீது யாரெல்லாம் விசுவாசம் வைப்பார்கள் என்பதை முன் அறிந்திருந்தார். அவர்கள் "தம்முடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு'' கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்றும் அவர் அறிந்திருந்தார்.

உலகத்தோற்றத்திற்கு முன்னே ஒவ்வொரு மனிதனைக் குறித்தும் தேவனுடைய தீர்மானம் என்னவாயிருந்தது என்பதை இந்த வசனங்களை வாசித்து எளிதாகப் புரிந்துகொள்ளலாம். இந்த வசனங்கள் சத்தியம் என்று ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரித்து விடலாம்.

தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய பிள்ளைகளாகச் சேரும்படி முடிவு எடுக்கும் கடமை மனிதர்களுக்கு உண்டு. இந்த வசனங்களை நாம் விசுவாசிக்காவிட்டால், வேதத்தைக் கற்றுக்கொள்ளும் நம்முடைய முயற்சி நம்மை திசை மாறி போகச் செய்துவிடும். பின்வரும் மூன்று காரணங்களை கவனிக்கத் தவறுவதால் நீங்கள் திசைமாறி போவதற்கு வாய்ப்பு உண்டாகிறது.

**முதலாவது** நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற அடையாளம் வேத வசனங்களில் தெளிவாகக் காட்டப்படுகின்றது.

**இரண்டாவது** தேவ சித்தத்தை பிரதான ஆசாரியராகவும், ராஜாவாகவும் இயேசு கிறிஸ்து நிறைவேற்றி, தேவனுக்காகப் பிள்ளைகளை உருவாக்கும் காலம் வரும் வரையிலும் நிகழ்ந்த அக்கிரமங்களையும், மீறுதல்களையும் தேவன் எப்படிப் பொறுமையாக சகித்துக்கொண்டார் என்ற விவரங்களை பரிசுத்த வேதாகமம் தெரிவிக்கின்றது. *கலாத்தியர் 4:4-6.*

**மூன்றாவது** உலகத்தையும், மனுக்குலத்தையும் படைப்பதற்கு முன்பே தேவனுடைய மனதிலிருந்த தீர்மானத்தின் படி உலகத்தின் முடிவிலே நடக்கும் என்று பரிசுத்த வேதாகமம் தெரிவிக்கின்றது. *லூக்கா 6:35; எபி. 2:10-13; வெளி. 3:21 ;21:7* வாசிக்கவும்.

இந்த வசனங்களின் மீது விசுவாசம் உள்ளவர்கள் எவர்களோ. அவர்களே தங்களுடைய உண்மையான அடையாளத்தைக் கண்டு கொண்டவர்கள். நாம் முழு உரிமையையும் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் என்பது நமக்குத் தெரியும். *ரோமர் 8:16; கலா. 4:4-6.* **நம்முடைய விசுவாசத்தின் கதவு, உன்னதத்தை நோக்கித் திறக்கப்பட்டு உள்ளது.** *எபேசியர் 2:7.* இந்த விதமாகவே பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களை வழிநடத்தி தேவனுடைய பிள்ளைகள் என்ற அடையாளத்தையும் தருகின்றார். "அப்பா பிதாவே, என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்." *ரோமர் 8:15,16.*